டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in

கல்யாண் ஜுவல்லர்ஸ்

agridoctor.in | 15.10.2024 செவ்வாய்க்கிழமை | பக்கங்கள் 29 | RNI No.TNTAM/2012/49602 | Vol.12, Issue : 099 - Madurai | Online Edition

# 9 மாவட்டங்களுக்கு ரெட் அலர்ட்!

## வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை!!

சென்னை, அக்.14

தமிழகத்தில் இன்று 4 மாவட்டங்களுக்கும், நாளை 9 மாவட்டங்களுக்கும் அதி கன மழைக்கான ரெட் அலெர்ட் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இது குறித்து வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், தென்கிழக்கு வங்கக்கடலில் ஒரு காற்றழுத்த தாழ்வு நிலவுகிறது. இது மேற்கு-வடமேற்கு திசையில் நகர்ந்து இன்று, ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு பகுதியாக வலுப்பெற்று, தெற்கு வங்கக்கடலின் மத்திய பகுதிகளில் நிலவக்கூடும். இது அதற்கடுத்த இரண்டு தினங்களில், மேற்கு-வடமேற்கு திசையில் நகர்ந்து, வடதமிழகம், புதுவை மற்றும் அதனை ஒட்டிய தெற்கு ஆந்திர கடலோரப் பகுதிகளை நோக்கி நகரக்கூடும்.

தமிழக பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல மேலடுக்கு சுழற்சி நிலவுகிறது. தெற்கு ஆந்திர கடலோரப்பகுதிகள் மற்றும் அதனை ஒட்டிய மத்திய மேற்கு வங்கக்கடல் பகுதிகளில் ஒரு வளிமண்டல மேலடுக்கு சுழற்சி நிலவுகிறது.

இதனடிப்படையில் இன்று (15ம் தேதி) தமிழகத்தில் பெரும்பாலான இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும், இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும். திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை மாவட்டங்கள் மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஒருசில இடங்களில் கன முதல் மிக கனமழையும், ஓரிரு இடங்களில் அதி கனமழையும், திருவள்ளூர், இராணிப்பேட்டை, சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவண்ணாமலை, விழுப்புரம், கள்ளக்குறிச்சி, கடலூர், அரியலூர், பெரம்பலூர், தஞ்சாவூர் மாவட்டங்கள், புதுச்சேரி பகுதிகளில் ஓரிரு இடங்களில் கன முதல் மிக கனமழையும், வேலூர், திருப்பத்தூர், கிருஷ்ணகிரி,

தர்மபுரி, சேலம், திருச்சிராப்பள்ளி மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழையும் பெய்ய வாய்ப்புள்ளது.

நாளை (16ம் தேதி) வடதமிழகத்தில் அநேக இடங்களிலும், தென்தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும், இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும். திருவள்ளூர், சென்னை, காஞ்சிபுரம், செங்கல்பட்டு, விழுப்புரம், கடலூர், மயிலாடுதுறை, நாகப்பட்டினம், திருவாரூர் மாவட்டங்கள், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஒரு சில இடங்களில் கன முதல் மிக கனமழையும், ஓரிரு இடங்களில் அதி கனமழையும், இராணிப் பேட்டை, திருவண்ணாமலை, கள்ளக்குறிச்சி, அரியலூர், பெரம் பலூர் மற்றும் தஞ்சாவூர் மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கன முதல் மிக கனமழையும், வேலூர். திருப்பத்தூர், கிருஷ்ணகிரி, தர்மபுரி, சேலம், திருச்சிராப்பள்ளி மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழையும் பெய்யவாய்ப்புள்ளது.

17ம் தேதி வடதமிழகத்தில் அநேக இடங்களிலும், தென் தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும், இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும். திருவள்ளூர், இராணிப்பேட்டை, வேலூர், திருப்பத்தூர் மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கன முதல் மிக கனமழையும், சென்னை, காஞ்சிபுரம், திருவண்ணாமலை, தர்மபுரி, சேலம் மற்றும் ஈரோடு மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்பு உள்ளது.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளை பொறுத்தவரையில், அடுத்த 24 மணி நேரத்திற்கு நேரக்கிற்கு வானம் பொதுவாக மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒருசில பகுதிகளில் இடி, மின்னலுடன் கூடிய கன – மிக கன மழை பெய்ய வாய்ப்புள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

# நாட்டுக்கோழி வளர்ப்பு மற்றும் நோய் மேலாண்மை முறைகள் குறித்த ஒரு நாள் பயிற்சி

சேலம், அக்,14

சேலம் மாவட்டம், சந்தியூர், தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழக வேளாண்மை அறிவியல் நிலையத்தில், நாளை புதன்கிழமை (16.10.24) நாட்டுக்கோழி வளர்ப்பு முறைகள் மற்றும் நோய் மேலாண்மை முறைகள் குறித்த ஒரு நாள் பயிற்சி நடைபெற உள்ளது. பயிற்சியில் கலந்து கொள்ள விருப்பம் உள்ளவர்கள் பதிவு கட்டணம் செலுத்தி முன்பதிவு செய்ய வேண்டும்.

முதலில் பதிவு செய்யும் 60 நபர்களுக்கு மட்டுமே முன்னுரிமை வழங்கப்படும். பயிற்சியில் கலந்து கொள்பவர்களுக்கு, மதிய உணவு, பயிற்சி கையேடு மற்றும் சான்றிதழ் வழங்கப்படும்.

கீழே கொடுக்கப்பட்டுள்ள லிங்கை பயன்படுத்தி பதிவு செய்து கொள்ளலாம்.

https://forms.gle/wo2vLnFoDCq9s9Jw6

பதிவு கட்டணம் ஒரு நபருக்கு ரூபாய் - 354 /- மட்டும்.

நாட்டுக்கோழி இனங்கள், தீவன மேலாண்மை முறைகள், கொட்டகை அமைக்கும் முறைகள், வளர்ப்புக்கான பண்ணை பொருளாதாரம், நாட்டுக்கோழிகளை தாக்கும் நோய்கள் மற்றும் தடுப்பு முறைகள், நாட்டுக்கோழி வளர்ப்பில் மரபுசார் மூலிகை மருத்துவத்தின் பயன்பாடு, விவசாயிகள் கோழிப்பண்ணைகள் அமைக்க, வங்கிகள் மூலம் கடன் பெறுவது எப்படி என்பன போன்றவற்றிற்கு ஆலோசனைகளும் வழங்கப்படும் .

மேலும் விவரங்களுக்கு, இரா.ஜெகதாம்பாள், திட்ட ஒருங்கிணைப்பாளர், வேளாண்மை அறிவியல் நிலையம், சந்தியூர், சேலம் மாவட்டம், 0427 - 2422550, 90955 13102 தொடர்பு கொள்ளலாம்.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.


நானோ யூரியா பிளஸ்
20 சதவீதம்
தழைச்சத்து கொண்ட நானோ திரவம்
500 மிலி
ரூ.225/-
IFFCO
NANO
UREA
PLUS
இலைவழி
தெளிப்பு
1லி. நீருக்கு
5 மி.லி
ஒரு ஏக்கருக்கு, ஒரு தெளிப்பிற்கு 500 மி.லி
முதல் தெளிப்பு - முக்கிய வளர்ச்சி
பருவமான கிளைப்பு | தூர்விடும் தருவாய்
இரண்டாம் தெளிப்பு - பூக்கும் பருவத்திற்கு முன்
அனைத்து பயிர்களுக்கும் ஏற்றது.

# நுண்ணுயிர் உரங்கள் மற்றும் அதன் பயன்கள் குறித்து விவசாயிகளுக்கு விழிப்புணர்வு



விருதுநகர், அக்.14

விருதுநகர் மாவட்டம், ஸ்ரீ வில்லிபுத்தூர் கலசலிங்கம் வேளாண்மை மற்றும் தோட்டக்கல்லூரியின் இறுதி ஆண்டு இளங்கலை வேளாண் துறை மாணவர்கள் ஆனந்தமுருகன், ஆகாஷ், எழில் ஆகாஷ், முகைதீன் பைசல், ஸ்ரீதர் நவீன், பால சுப்ரமணியன், ஆகாஷ் குபேந்திரன் மற்றும் சந்தோஷ் சிவன் வேளாண் பணி அனுபவத் திட்டத்தின் கீழ் கிராம தங்கல் திட்டத்தில் ஸ்ரீவில்லிபுத்தூர் பகுதியில் தங்கி விவசாயிகளை நேரில் சந்தித்து ஆலோசனைகளையும் செயல்முறை விளக்கமும் விழிப்புணர்வும் ஏற்படுத்தி வருகின்றனர்.

இம்மாணவர்கள் ஸ்ரீவில்லிபுத்தூர் வேளாண்மை உதவி இயக்குநர் தனலட்சுமி, வேளாண்மை அலுவலர் குருலட்சுமி, பாட ஆசிரியர் டாக்டர். ஜெயந்தி மற்றும் குழு ஆலோசகர் சதீஷ் குமார் அறிவுரையின்படி, ஸ்ரீவில்லிபுத்தூர் அருகில் உள்ள பிள்ளையார்நத்தம் கிராமத்தில் விவசாயிகளுக்கு தமிழ்நாடு அரசின் கீழ் வேளாண் துறையின் மூலம் செயல்படுத்தப்படும் பண்ணை பள்ளி திட்டத்தில் நுண்ணுயிர் உரங்கள் மற்றும் அதன் பயன்கள் குறித்தும் விவசாயிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தினர். இதில் குறிப்பாக சூடோமோனாஸ் ப்ளோரசன்ஸ் குறித்து விரிவாக விளக்கினர்.

சூடோமோனாஸ் ப்ளோரசன்ஸ் மண்ணின் மூலம் பரவும் நோய்களான வேரழுகல், வாடல் நோய், நாற்றழுகல் நோய் மற்றும் குண்டாந்தடி வீக்க வேர் நோய் போன்றவற்றை கட்டுப்படுத்துவதுடன் இலைவழி மூலம் பரவும் பூசண நோய்களான குலை நோய், இலையுறை கருகல் நோய், இலைப்புள்ளி நோய் மற்றும் ஆன்த்ராக்னோஸ் ஆகியவற்றின் பாதிப்பையும் குறைக்கிறது என்று விவசாயிகளுக்கு தெளிவாக எடுத்து கூறினர்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**

## கோவை ஆர்.எஸ்.புரம் உழவர் சந்தை விலை விபரம் — 14.10.2024

| வ. எண் | காய்கறி விபரம் | குறைந்த பட்சம் | அதிக பட்சம் | வ. எண் | காய்கறி விபரம் | குறைந்த பட்சம் | அதிக பட்சம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | கத்திரி(Hybrid) | 20 | 24 | 56 | காளான் (சிப்பிபட்டன்)200GM | 35 | 40 |
| 1A | கத்திரி(Simron) | 20 | 26 | 57 | உருளை (பிற) | 36 | 40 |
| 1B | கத்திரி(Nadu) | 35 | 40 | 57A | உருளை(ஊட்டி) | 50 | 55 |
| 2 | வெண்டை | 38 | 42 | 58 | மேரக்காய் | 20 | 26 |
| 3 | தக்காளி (நாடு) | 45 | 50 | 59 | முள்ளங்கி(சிவப்பு) | 25 | 28 |
| 4 | தக்காளி ஆப்பிள் | 40 | 44 | 60 | கேரட் | 55 | 60 |
| 5 | அவரை(பிஸ்கட்) | 60 | 65 | 61 | பீட்ரூட் (ஊட்டி) | 40 | 44 |
| 6 | புடலை | 22 | 26 | 62 | நூல்கோல் | 40 | 44 |
| 7 | பீர்க்கன் | 28 | 32 | 63 | டர்னிப் | 40 | 45 |
| 8 | சுரைக்காய் | 20 | 24 | 64 | மு.கோஸ் | 20 | 23 |
| 9 | பாகற்காய் | 30 | 35 | 65 | மு.கோஸ்(கலர்) | 30 | 35 |
| 10 | கொத்தவரை | 32 | 36 | 66 | காளிபிளவர் | 55 | 60 |
| 11 | பூசணி | 12 | 16 | 67 | பட்டாணி | 190 | 200 |
| 12 | அரசாணி | 15 | 18 | 68 | பூண்டு | 260 | 300 |
| 13 | ப.மிளகாய்(சம்பா) | 30 | 34 | 69 | இஞ்சி | 50 | 140 |
| 14 | ப.மிளகாய்(Bullet/Nadu) | 35 | 40 | 70 | புருக்கோலின் | 100 | 120 |
| 15 | சி.வெங்காயம் | 50 | 55 | 71 | பென்னி பீன்ஸ் | 150 | 155 |
| 16 | பெ.வெங்காயம்(புதியது) | 40 | 44 | 72 | குடமிளகாய் | 55 | 60 |
| 17 | த.பயறு(வெள்ளை) | 35 | 38 | 73 | ஊட்டி அவரை | 130 | 140 |
| 18 | பச்சை மொச்சை | 45 | 48 | 74 | பஜ்ஜி மிளகாய் | 30 | 35 |
| 19 | முருங்கை | 55 | 64 | 71A | | | |
| 20 | தேங்காய் | 47 | 50 | | | | |
| 21 | | | | | | | |
| 22 | வாழைக்காய் | 35 | 40 | | | | |
| 23 | சேனைகிழங்கு | 58 | 62 | | | | |
| 24 | கருணைகிழங்கு | 75 | 80 | 75 | எலுமிச்சை | 110 | 120 |
| 25 | சேப்பங்கிழங்கு | 50 | 55 | 76 | கொய்யா (வெள்ளை/சிவப்பு) | 50 | 65 |
| 26 | மரவள்ளி | 30 | 34 | 77 | | | |
| 27 | சர்க்கரைவள்ளி | 50 | 55 | 78 | பப்பாளி | 35 | 40 |
| 28 | கறிவேப்பிலை | 45 | 48 | 79 | மாதுளை | 200 | 240 |
| 29 | கொத்தமல்லி | 35 | 40 | 80 | திராட்சை | 70 | 80 |
| 30 | புதினா | 5 | 6 | 81 | மாம்பழம் | 0 | 0 |
| 31 | அகத்திக்கீரை | 12 | 15 | 82 | ஆப்பிள் | 100 | 140 |
| 32 | தண்டுக்கீரை | 12 | 15 | 83 | ஆரஞ்ச் | 60 | 70 |
| 33 | சுக்கிட்டி&வெந்தயம் | 18 | 20 | 84 | சாத்துக்குடி | 50 | 60 |
| 34 | அரைக்கீரை | 12 | 15 | 85 | அன்னாசி பழம் | 60 | 70 |
| 35 | சிறுகீரை | 12 | 15 | 86 | சீதாப்பழம் | 45 | 50 |
| 36 | பாலாக்கு | 12 | 15 | 87 | முலாம்பழம் | 50 | 55 |
| 37 | பருப்புக்கீரை | 12 | 15 | 88 | தர்பூசணி | 15 | 20 |
| 38 | முருங்கைக்கீரை | 8 | 10 | 89 | | | |
| 39 | வல்லாரை | 8 | 10 | 90 | கதளி | 55 | 60 |
| 40 | கோவக்காய் | 30 | 34 | 91 | பூவன் | 45 | 50 |
| 41 | வாழைத்தண்டு | 5 | 10 | 92 | ரஸ்தாளி | 50 | 56 |
| 42 | வாழை இலை | 4 | 5 | 93 | கற்பூரவள்ளி | 50 | 56 |
| 43 | வாழைப்பூ | 10 | 15 | 94 | மோரிஸ் | 34 | 38 |
| 44 | முட்டைகோஸ் (உள்ளூர்) | 20 | 23 | 95 | நாடன் | 45 | 50 |
| 45 | வெள்ளரி | 22 | 26 | 96 | நேந்திரன் | 35 | 40 |
| 46 | பீட்ரூட் (உள்ளூர்) | 22 | 26 | 97 | செவ்வாழை | 80 | 85 |
| 47 | சுண்டக்காய் | 140 | 150 | 98 | பேரிக்காய் | 120 | 160 |
| 48 | வெங்காயத்தாள் | 8 | 10 | 99 | நார்த்தங்காய் | 35 | 40 |
| 49 | | | | 100 | கறிப்பலா | 35 | 40 |
| 50 | நிலக்கடலை | 65 | 70 | 101 | டிராகன் ப்ரூட் | 150 | 160 |
| 51 | மக்காச்சோளக்கதிர் | 24 | 28 | 102 | நெல்லிக்காய் | 70 | 80 |
| 52 | | | | | | | |
| 53 | ஸ்வீட் கான் | 35 | 40 | | | | |
| 54 | இளநீர்(சிறியது/பெரியது) | 30 | 33 | | | | |
| 55 | முள்ளங்கி(வெள்ளை) | 28 | 32 | | | | |

# ராபி பருவ கிராம வேளாண் முன்னேற்றக்குழு விவசாயிகள் பயிற்சி



மதுரை, அக்.14

மதுரை மாவட்டம், அலங்காநல்லூர் வட்டாரம், வேளாண்மைத் துறையின் வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை திட்ட நிதியின் 2024-25 ஆம் ஆண்டு கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட மாணிக்கம்பட்டி கிராமத்தில் கிராம வேளாண் முன்னேற்றக்குழு உறுப்பினர் ராபி பருவ பயிற்சி நடைபெற்றது.

இப்பயிற்சியில் வட்டார தொழில்நுட்பக்குழு ஒருங்கிணைப் பாளர்/வேளாண்மை உதவி இயக்குநர் மு.வசந்தகுமார், கிராம வேளாண் முன்னேற்றக்குழு செயல்பாடு, அமைப்பு, அதன் நோக்கம், பற்றியும் எடுத்துரைத்து தலைமையேற்று பயிற்சி யினை தொடங்கி வைத்து பாரத பிரதம மந்திரி கிசான் நிதி திட்டம், பிரதம மந்திரி பயிர் காப்பீட்டுத் திட்டம், நுண்ணீர்ப் பாசன திட்டம், ஒருங்கிணைந்த பண்ணைய திட்டம், முதலமைச்சரின் மண்ணுயிர் காத்து மன்னுயிர் காப்போம் திட்டம், தமிழ்நாடு சிறுதானிய இயக்கம் திட்டம், அங்கக வேளாண்மை செயல் விளக்கத்திடல் மற்றும் மாநில வேளாண் வளர்ச்சித் திட்டம் குறித்து விவசாயிகளிடம் உரையாற்றினார்.

ஓய்வு பெற்ற வேளாண்மை அலுவலர் மகாராஜன், ராபி பருவத்தில் சாகுபடி செய்யும் நிலக்கடலை, பயறுவகை ஒருங் கிணைந்த பயிர் மேலாண்மை சாகுபடி முறைகளான பூஞ்சாண விதை நேர்த்தி, திரவ உயிர் உரங்கள், நுண்ணூட்ட உரங்களின் பயன்கள், ஒருங்கிணைந்த பூச்சி நோய் மேலாண்மை முறை கள், ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து மேலாண்மை முறைகள், இயற்கை வேளாண்மை, அறுவடை செய் பின் நேர்த்தி முறைகள் குறித்து விவசாயிகளுக்கு விளக்கமளித்தார். வேளாண்மை விற்பனைத்துறை உதவி அலுவலர் பரமேஸ் வரன், வேளாண்மை விற்பனைத்துறை மூலம் வழங்கப்படும் திட்டங்கள் பற்றி எடுத்துரைத்தார்.

மேலும் மாணிக்கம்பட்டி கிராம அளவிலான திட்ட பொறுப்பு அலுவலர், கி.விக்னேஷ், வேளாண்மைத்துறை மூலம் வழங்கப் படும் மானியத் திட்டங்கள் பற்றியும் வழங்கப்படும் இடு பொருட்கள் குறித்தும் எடுத்துரைத்து விவசாயிகள் மானியத்தில் வாங்கி பயன்பெறுமாறு கேட்டுக் கொண்டார்.

மேலும் பயிற்சியில் கலந்து கொண்ட விவசாயிகளுக்கும் தொழில்நுட்ப உரையாற்றிய அலுவலர்களுக்கும் வட்டார தொழில்நுட்ப மேலாளர் பா.வேல்முருகன் நன்றி கூறினார்.

இப்பயிற்சிக்கான ஏற்பாடுகளை அட்மா திட்ட அலுவலர்கள் வசந்தி மற்றும் சௌந்தராஜன் ஆகியோர் செய்திருந்தனர்.



# மதுரை மாவட்டத்தில் சுமார் ரூ.1,83,000/- மதிப்புள்ள விதைகளுக்கு விற்பனைத் தடை



மதுரை, அக்.14

மதுரை மாவட்டத்தில் ரூ.1,83,150 /- (ஒரு லட்சத்து எண்பத்தி மூன்றாயிரத்து நூற்றி ஐம்பது) மதிப்புள்ள விதைகளுக்கு விற்பனைத் தடை விதிக்கப்பட்டது.

மதுரை, மாட்டுத்தாவணி பகுதியில் உள்ள விதை விற்பனை நிலையங்களில் மதுரை, விதை ஆய்வு துணை இயக்குநர் சு.வாசுகி தலைமையில் மதுரை விதை ஆய்வாளர் ராஜபாண்டி, திருப்பரங்குன்றம் விதை ஆய்வாளர் இரா.அகிலா மற்றும் திருமங்கலம் விதை ஆய்வாளர் மோ.கோபி ஆகியோர் அடங்கிய ஆய்வுக்குழுவினரால் திடீர் ஆய்வு மேற்கொள்ளப் பட்டது.

இத்திடீராய்வில் விதை விற்பனையில் கடைப்பிடிக்கப்பட வேண்டிய நடைமுறைகள் முறையாகப் பின்பற்றப்படுகிறதா? என ஆய்வு செய்யப்பட்டது. விதை இருப்புப்பதிவேடு, விற்பனைப் பட்டியல்கள், பிற மாநிலத்திலிலருந்து உற்பத்தி செய்யப்படும் விதைகளை விற்பனை செய்வதற்கான அனுமதிச்சான்று, முளைப்புத்திறன் ஆய்வறிக்கை போன்ற ஆவணங்கள் இல்லாமல் விதை விற்பனை செய்வது விதைகள் சட்டம் 1966ன் படி குற்றம் என்பது சுட்டிக்காட்டப்பட்டது.

விவசாயிகள் உரிமம் பெற்ற விதை விற்பனை நிலையங்களில் மட்டுமே விதைகள் வாங்க வேண்டுமெனவும் விதைகள் வாங்கும் போது விற்பனைப் பட்டியலில், விவசாயின் பெயர், முகவரி, பயிர், ரகம், குவியல் எண், காலவதி நாள் போன்ற விவரங்கள் தெளிவாகக் குறிப்பிடப்பட்டு, விவசாயியின் கையொப்பம் பெற்று வாங்க வேண்டும் எனவும் தெரிவிக்கப் பட்டது.

விதைகள் இருப்பு மற்றும் விலை விபரத்தினை பொது மக்களுக்கு நன்கு தெரியும்படியான இடத்தில் கரும்பலகையில் எழுதி வைத்திடவும் அறிவுறுத்தப்பட்டது.

மேலும், விதைகள் மொத்த வியாபாரம் செய்யும் வணிகர்கள் விதை உரிமம் பெற்ற சில்லரை விற்பனையாளர்களுக்கு மட்டுமே விதை விற்பனை செய்ய வேண்டும். உரிமம் இல்லாத விற்பனையாளர்களுக்கு விதை விற்பனை செய்தால் சம்மந்தப் பட்ட நிறுவனத்தின் மீது விதைகள் சட்டப்படி கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என எச்சரிக்கப்பட்டது.

மேலும், பிற நிறுவனங்களுக்கு விதைகள் விற்பனை செய்யும் போது, விற்பனை செய்யும் நிறுவனம் மற்றும் கொள்முதல் செய்யம் நிறுவனம் ஆகிய இரண்டிற்கும் விதை விற்பனை உரிமம் எண் குறிப்பிடப்படவேண்டும். விதை சேமிப்புக்




கிடங்குகள் சுத்தமான முறையில் பராமரிக்கப்பட வேண்டும். விதைகள் 8 மூட்டை உயரத்திற்கு மிகாமல் அடுக்கி வைக்கப்பட வேண்டும். சேமிப்புக் கிடங்குகளில் உர மூட்டைகளுக்கும், விதை மூட்டைகளுக்கும் உரிய இடைவெளி விட்டு அடுக்கி வைக்கப்பட வேண்டும் என அறிவுறுத்தப்பட்டது.

முறையற்ற வகையில் இருப்பு வைக்கப்பட்டிருந்த ரூ.1,83,150 மதிப்புள்ள 4.75 மெ.டன் நெல் விதைகளுக்கு விற்பனைத் தடை விதிக்கப்பட்டது. முறையான ஆவணங்கள் மற்றும் பதிவேடுகள் இல்லாமல் விதை விநியோகம் செய்த விற்பனை யாளர் மீது துறை ரீதியான நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளது.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**


டி ஸ்டேன்ஸ் அண்ட் கம்பெனி லிமிடெட்
Stanes
பயிரின் வேர்களைத் தாக்கும்
நூற்புழு பிரச்சனையா?
வேர் முடிச்சுகள்
வேர் வீக்கம்
வேர் அழுகல்
பயன்படுத்துவீர்.....
பயோ நெமட்டான்
BIO NEMATON
"இது வேர்களைத் தாக்கும் தீமைசெய்யும் நூற்புழுக்களையும் அதன் முட்டைகளின் செயல்பாட்டையும் தடுக்கிறது"
ஆரோக்கியமான வேர் வளர்ச்சிக்கு உதவுகிறது
பூஞ்சாண (அ) பாக்டீரியா நோய்கள் வரும் அபாயத்தை குறைக்கிறது
ஏக்கருக்கு 2 லிட்டர்
டி ஸ்டேன்ஸ் அண்ட் கம்பெனி லிமிடெட்
8/23-24, ரேஸ்கோர்ஸ் சாலை,
கோயமுத்தூர் - 641018
தொடர்புக்கு : 84899 04949

# மாடி தோட்டம் அமைக்க போகிறீர்களா?



தற்போது வீட்டிலேயே மாடித் தோட்டம் அமைத்து அதன் மூல மாக பெறப்படும் நஞ்சில்லா, ரசாயன கலப்பு இல்லாத சத்தான காய்கறிகளை உண வாக சமைத்து சாப்பிட வேண்டும் என்ற ஆசை பலருக்கும் உண்டு.

வீட்டில் டி.வி.யிலே முடங்கி இருக்கும் மகளிருக்கு ஒரு பொழுது போக்காகவும் மாடித் தோட்டம் உள்ளது. இன்றைய இளைய தலைமுறை யினர் இதனை அதிகமாக அமைக்க ஆர்வமாக உள்ளனர். அதுவும் ஐ.டி பில்டில் இருப்பவர்களுக்கு மாடிதோட்டம் டென் சனை குறைக்கும் வழியாக உள்ளது என்றால் மிகையல்ல.

**மாடித்தோட்டம் அமைக்கும் போது கவனிக்க வேண்டியவை. என்ன என்ன?**

1)முதலில் உங்களுடைய வீடு மாடித்தோட்டம் அமைக்க ஏற்றதாக உள்ளதா? என உறுதி செய்ய வேண்டும். அதுவும் வாடகை வீடு என்றால் வீட்டின் உரிமையாளரிடம் அனுமதி பெற்றே அமைக்க வேண்டும். இல்லையெனில், தேவையற்ற விவாதங்கள், பிரச்சனைகள் உருவாக்கும்.

2) காய்கறி விதை வளர்ப்பு (GROW BAG) போன்றவை உள்ளிட்ட கிட் தோட்டக்கலைத்துறை மூலமாக நகர்ப்புறவாசி களுக்கு ஒரு குடும்பத்திற்கு, 2 கிட் வீதமாக வட்டார தோட்டக் கலை உதவி இயக்குனராக அலுவலகத்தில் 50% மானியத்தில் வழங்கப்படும். அதனை வாங்கி பயன்படுத்திடலாம்.

3) செடிகளை வளர்க்க வீட்டில் பயனற்று போன, தண்ணீர் கேன், பழைய பிளாஸ்டிக் குடம், பக்கெட், வாளி, மண் சட்டிகள் போன்றவற்றை பயன்படுத்திடலாம்.

4) காய்கறி விதைகள் அருகேயுள்ள உரக்கடை மற்றும் முன்னோடி விவசாயிகளிடத்தில் வாங்கி கொள்ளலாம்.

5) தொட்டிகளில் மண் நிரப்பும் போது (POT MIXTURE) மக்கிய தொழ உரம் + மணல் + செம்மண் கலந்த கலவையை அதனுடைய விளிம்பு வரை அழுத்தி நிரப்ப க்கூடாது.

6) தொட்டில் 3/4 பங்கு அளவு உயரத்திற்கு, நிரப்பினாலே போதும். மண்ணை நிரப்புவதற்கு முன் அந்த தொட்டி (பாத்திரம்) அடியிலே ஓட்டை (துளைகள்) இருக்கிறதா? என பார்த்துக் கொள்ளவும்.




7) பெரும்பாலும் நாட்டு காய்கறி விதைத்தால் மறுபடியும் அடுத்த பருவத்திற்கு தேவையான விதைகளை எடுத்து வைக்கலாம்.

8) கழிவு நீர், சோப்பு கலக்காத நீரை பயன்படுத்தலாம். சொட்டுநீர் பாசன மற்றும் RAIN GUN) உபயோகிக்கலாம்.

9) பூச்சி / நோய் தாக்குதல் தென்பட்டால் தாவர பூச்சிக் கொல்லிகளை பயன்படுத்தலாம்.

10) கூடுதலான மகசூல் பெற மீன் அமிலம், பஞ்ச காவியா, மண்புழு உரம் போன்றவற்றை பயன்படுத்தலாம்.

11) தினமும் வீடுகளில் உண்டாகும் காய்கறி கழிவுகள், முட்டைத்தோல் ஓடு போன்றவற்றை ஒரு தொட்டியில் கொஞ்சம் மண் போட்டு காய்கறி கழிவுகளை அதன்மேல் போட்டு




சாணக்கரைசல் தெளித்து கிளறி விட்டால் அதுவே மக்கிய இயற்கை உரமாகி விடும். இதனை பயன்படுத்தலாம், எவ்வித செலவின்றி தயாரிக்கலாம் வீட்டுல.

12) கொடிவகை காய்கறி செடிகள் பந்தலில் படர வலை பின்னல் பந்தல் அமைக்கலாம்.

13) கீரை வகைகளை தனியாக தனியாக தொட்டியிலே வளர்க்கலாம்.

இரசாயன கலப்பின்றி நம்முடைய உழைப்பால் கிடைத்த காய்கறிகளை பச்சைபசேல் என்று பறித்தவுடன் சமைத்தாலே அதுவே ஒரு ஆனந்தமாக இருக்கும் என்பதில் மாற்று கருத்து உண்டா?

மாடித்தோட்டம் அமைப்போம் மனநிறைவுடன் வாழ்வோம்.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**


இப்பொழுது தென்னிந்தியாவின் பிரபலமான வாழை இரகங்களின் கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு தொழில்நுட்பத்தில் உங்களுக்காக உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்: கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்: கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Jain Irrigation Systems Ltd.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் மரபணுத் தேர்வு : கோட்பாடுகள் மற்றும் முறைகள் என்ற தலைப்பில் ஐந்து நாள் பயிற்சி நிகழ்ச்சி



கோயம்புத்தூர், அக்.14

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம் புத்தூர் மற்றும் சர்வதேச நெல் ஆராய்ச்சி நிறுவனம், பிலிப்பைன்ஸ், இணைந்து 14.10.24 முதல் 18.10.24 வரை, கோயம்புத்தூரில் உள்ள தாவர மூலக்கூறு உயிரியல் மற்றும் உயிரி தொழில்நுட்ப வியல் மையத்தில் ‘மரபணுத் தேர்வு : கோட்பாடுகள் மற்றும் முறைகள்‘ என்ற தலைப்பில் ஐந்து நாள் பயிற்சி நிகழ்ச்சியை ஏற்பாடு செய்துள்ளது. இதில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம், ஐசிஏஆர் ஆராய்ச்சி நிறுவனங்கள், கேரள வேளாண்மைப் பல்கலைக்கழகம் மற்றும் கர்நாடகாவின் யுஏஎஸ் பெங்களூர் ஆகிய பல்கலைக்கழகங்களின் பேராசி ரியர்கள் மற்றும் விஞ்ஞானிகள் இந்தப் பயிற்சித் திட்டத்தில் பங்கேற்றனர்.

தாவர இனப்பெருக்கம் மற்றும் மரபியல் மையத்தின் இயக்குநர் முனைவர் ஆர்.ரவிகேசவன் வரவேற்புரை வழங்கினார். மேலும், வளவாளர்களான முனைவர் ராஜாரகுபதி, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், முனைவர் பார்த்திபன் பிரகாஷ், பிலிப்பைன்ஸ், சர்வதேச நெல் ஆராய்ச்சி நிறுவனம் மற்றும் பயிற்சியில் பங்கேற்றவர்களை வரவேற்றார். பயிர் மேம்பாட்டுத் திட்டங்களுக்கு இளம் ஆராய்ச்சியாளர்கள் பயிற்சியைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

தாவர மூலக்கூறு உயிரியல் மற்றும் உயிரி தொழில்நுட்ப வியல் மையத்தின் இயக்குனர் முனைவர் ந.செந்தில் தனது தொடக்க உரையில், மரபணு தொழில்நுட்பத்தில் முன்னேற்றம் மற்றும் அரிசி/கோதுமையில் மரபணுத் தேர்வைப் பயன்படுத்து வதன் முக்கியத்துவத்தை எடுத்துரைத்தார். பயிற்சி குறித்து வளவாளர்கள் மற்றும் பங்கேற்பாளர்களுக்கு முன்னுரை வழங்கினர்.

முனைவர் எம்.ரவீந்திரன், ஆராய்ச்சி இயக்குனர், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர், தனது தலைமை உரையில், 2050-க்குள் உணவு தானிய உற்பத்தியைப் பாதுகாக்க மேம்படுத்தப்பட்ட ரகங்களை உருவாக்குவதன் முக்கியத்துவம் பற்றி விளக்கினார். முன்னதாக, மேம்படுத்தப்பட்ட ரகங்கள் SD1 அல்லீலைக் கொண்ட மரபணு இருப்புகளைப் பயன்படுத்தி உருவாக்கப்பட்டன.

காலநிலை மீள் தன்மையை அடைய பல்வேறு அழுத்த நிலைமைகளின் கீழ் அதிக விளைச்சலுக்கு பயிர் வகைகளை மேம்படுத்துவதன் முக்கியத்துவம் பற்றி அவர் குறிப்பிட்டார். பயிரிடப்பட்ட வகைகளில் ஒற்றை மரபணுவின் பிறழ்வு மூலம் திருப்புமுனை சாதனைகள் நிறைவேற்றப்பட்டதால், தற்போதைய மரபணு தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி பயிர் மேம்பாட்டுத் திட்டத்திற்கு பல பண்புகளை இலக்காகக் கொள்ள வேண்டும்.

இப்பயிற்சித் திட்டத்தை மரபணுத் தேர்வு குறித்த அறிவை பயிர் மேம்பாட்டிற்குப் பயன்படுத்தலாம், என்றும் அவர் குறிப்பிட்டார். தாவர உயிரி தொழில்நுட்பத் துறை பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் இ.கோகிலாதேவி நன்றியுரை வழங்கினார்.

அதைத் தொடர்ந்து மரபணுத் தேர்வு : கோட்பாடுகள் மற்றும் முறைகள் பயிற்சிகள் வழங்கப்பட உள்ளன.



# மக்காச்சோளப் பயிரில் படைப்புழுக்கள் தாக்குதலை கட்டுப்படுத்த ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு வழிமுறைகள்



அரியலூர், அக்.14

அரியலூர் வட்டாரத்தில் சுமார் 6000 எக்டர் பரப்பளவில் மானாவரியாக மக்காச்சோளம் சாகுபடி செய்யப்பட்டு வளர்ச்சி பருவத்தில் உள்ளது. இந்த பருவத்தில் மக்காச்சோளத்தில் படைப் புழுவின் பாதிப்பை தவிர்த்து அதிக மகசூல் பெற கீழ்க்கண்ட உத்திகளைப் பின்பற்றுமாறு வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் ஆ.சாந்தி கூறுகிறார்.

ஏக்கருக்கு 20 எண்ணிக்கையில் இனக்கவர்ச்சி பொறி வைத்தல் வேண்டும். இதன் மூலம் தாய்பூச்சி முட்டையிடு வதைக் கட்டுப்படுத்தலாம். விவசாயிகள் தோட்டத்தில் குறுக்கும் நெடுக்கும் நடந்து விதைத்த 25 நாட்கள் வரை பயிரில் முட்டை குவியல்கள், புழுக்களைக் கையால் சேகரித்து அழிக்க வேண்டும். வரப்பு பயிராக சூரியகாந்தி, எள், தட்டைப்பயறு ஆகிய வற்றை 4 வரிசை விதைக்க வேண்டும். ஊடுபயிராக உளுந்து, பாசிப்பயறு போன்றவற்றைப் பயிரிட வேண்டும். இதனால் படைப்புழுவின் தாய் பூச்சி முட்டையிடுதல் வெகுவாகக் குறையும். விதைத்த 10 முதல் 20 நாளில் அசாடிரக்டின் 1 சதவீதம் இசி 20 மில்லி அல்லது தயோடிகார்ப் 20 கிராம் அல்லது இமா மெக்டின் பென்சோயேட் 4 கிராம் 10 லிட்டர் நீரில் கலந்து தெளிக்க வேண்டும்.

விதைத்த 40 முதல் 45-வது நாளில் ஸ்பைனிடோரம் 12 சதவீதம் எஸ்இ 5 மில்லி அல்லது மெட்டாரைசியம் - 80 கிராம் அல்லது குளோரன் டிரானிலிபுரோல் - 4 மில்லி அல்லது புளூபென்டமைட் - 4 மில்லி அல்லது நோவாலுஜுரான் 15 மில்லி இவற்றில் ஏதாவது ஒன்றை 10 லிட்டர் தண்ணீரில் கலந்து குருத்துப் பகுதியில் படுமாறு தெளிக்க வேண்டும்.

இவ்வாறு மேற்கண்ட தொழில்நுட்பங்களை பயன்படுத்தி 40 - 45 நாட்களில் படைப்புழுவின் தாக்குதலை கட்டுப்படுத்தி விட்டால் 45 - 105 நாள் வரை இப்புழுவின் தாக்குதலை வெகுவாக குறைத்து, அதிக மகசூல் பெருமாறு அரியலூர் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் கேட்டு கொள்கிறார்.


இப்பொழுது தென்னிந்தியாவின் பிரபலமான வாழை இரகங்களின் கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு தொழில்நுட்பத்தில் உங்களுக்காக உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்: கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்: கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# சாகுபடிக்கு தேவையான வேளாண் இடுபொருட்கள் மாவட்டத்தில் கையிருப்பு உள்ளது

## வேளாண்மை இணை இயக்குநர் தகவல்



புதுக்கோட்டை, அக்.14

புதுக்கோட்டை மாவட்டத்திற்கு சம்பா சாகுபடிக்கு தேவையான உரங்கள் 1069 மெட்ரிக் டன்கள் தூத்துக்குடியில் இருந்து சரக்கு இரயிலில் புதுக்கோட்டை வந்தடைந்தது என மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் (பொ) வி.எம்.ரவிச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்ததாவது, புதுக்கோட்டை மாவட்டத்தில் தற்பொழுது மேற் கொள்ளப்பட்டு வரும் சம்பா நெல் சாகுபடிக்கும், ஏற்கனவே, பயிரிட்டுள்ள மக்காச்சோளம், நிலக்கடலை, உளுந்து, தென்னை, கரும்பு மற்றும் தோட்டக்கலைப் பயிர்கள் ஆகிய பயிர்களுக்கும் தேவையான உரங்களான யூரியா 5525 மெட்ரிக் டன்கள், டிஏபி 825 மெட்ரிக் டன்கள், பொட்டாஷ் 838 மெட்ரிக் டன்கள், காம்ப்ளக்ஸ் 4608 மெட்ரிக் டன்கள் மற்றும் சூப்பர் பாஸ்பேட் 774 மெட்ரிக் டன்கள் ஆகியவை மாவட்டத் திலுள்ள அனைத்து வட்டாரங்களிலும் உள்ள தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் மற்றும் தனியார் சில்லரை விற்பனை நிலையங்கள் ஆகியவற்றில் உரங்கள் இருப்பு வைக்கப்பட்டு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேலும் விவசாயிகளுக்கு வழங்கிடும் வகையில் அனைத்து வட்டார வேளாண்மை விரிவாக்க மையங்களில், 46,035 லிட்டர் திரவ உயிர் உரங்களும், 19 மெட்ரிக் டன்கள் சிங்சல்பேட் நுண்ணூட்ட உரமும், 65.2 மெட்ரிக் டன்கள் நெல் நுண்ணூட்ட உரக்கலவையும் இருப்பு வைக்கப்பட்டு விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

புதுக்கோட்டை மாவட்டத்திற்கு தேவையான உர விநியோகத் திட்ட இலக்கீட்டின்படி உர நிறுவனங்களிலிடமிருந்து உரங்கள் பெறப்படுவதற்கு தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இந்நிலையில், தற்போது சம்பா சாகுபடிக்கு தேவையான உரங்களான யூரியா உரம் 620 மெட்ரிக் டன்களும், டிஏபி உரம்

254 மெட்ரிக் டன்களும், காம்ப்ளக்ஸ் உரம் 195 மெட்ரிக் டன்களும் தூத்துக்குடி ஸ்பிக் நிறுவனத்திலிருந்து சரக்கு இரயில் மூலம் புதுக்கோட்டை மாவட்டத்திற்கு வரப்பெற்றது. இந்த உரங்கள், மாவட்டத்திலுள்ள பல்வேறு பகுதிகளுக்கு விவசாயிகள் பயன்படும் வகையில் அனுப்பி வைக்கப்படுவதை வேளாண்மை இணை இயக்குநர் அறிவுரைப்படி புதுக்கோட்டை மாவட்டத் தரக் கட்டுப்பாட்டு வேளாண்மை உதவி இயக்குநர் (பொ) ச.கிருஷ்ணமூர்த்தி ஆய்வு மேற்கொண்டார். ஆய்வின் போது ஸ்பிக் உர நிறுவனப் பிரதிநிதிகள் உடன் இருந்தனர்.

மேலும், மாவட்டத்தில் உர விற்பனை மற்றும் உர நகர்வு குறித்து சிறப்பு பறக்கும் படை மூலம் அவ்வப்போது ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருவதனால், உர விற்பனையாளர்கள் விதி மீறல்களில் ஈடுபடுவது கண்டறியப்பட்டால் உரக்கட்டுபாட்டு ஆணை 1985 இன்படியும் மேலும், உர நகர்வு கட்டுப்பாட்டு ஆணை 1973 இன்படியும் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என எச்சரிக்கப்படுகிறது.




எனவே, மாவட்டத்திலுள்ளள சில்லரை உர விற்பனை யாளர்கள் உரக் கட்டுப்பாட்டு ஆணைப்படி மானிய விலை உரங்களை விற்பனை முனையக் கருவி மூலம் விவசாயிகளின் ஆதார் எண் மூலமே விற்பனை செய்ய வேண்டும். உரங்களின் இருப்பு மற்றும் விலை விபரங்கள் அடங்கிய தகவல் பலகை தவறாமல் விவசாயிகளின் பார்வையில் படும்படி பராமரிக்கப்பட வேண்டும். உர மூட்டைகளில் குறிப்பிட்டுள்ள அதிகபட்ச விலைக்கு மிகாமல் உரங்களை விற்பனை செய்ய வேண்டும். விவசாயிகளுக்குத் தேவையான உரங்களுடன் வேறு சில இடுபொருட்களை இணைத்து வழங்கக் கூடாது எனவும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

மொத்த உர விற்பனையாளர்கள் எக்காரணத்தை முன்னிட்டும் பிற மாவட்டங்களுக்கு உரங்களை அனுப்பிடவும், பிற மாவட்டங் களிலிருந்து கொள்முதல் செய்வதும் கூடாது. உர உரிமத்தில் அனுமதி பெறாத இடங்களில் இருப்பு வைப்பதும், உரங்களை

விற்பனை செய்வதும் கண்டறியப்பட்டால் உரக் கட்டுப்பாட்டு ஆணை 1985-இன்படி உர உரிமம் இரத்து செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என எச்சரிக்கப்படுகிறது.

தற்போது மாவட்டத்தில் கனமழை எதிர்பார்க்கப்படுவதால் விவசாயிகள் தங்கள் வயல்களில் உரங்கள் மற்றும் நுண்ணூட்ட உரங்கள் இடுவதையும், பூச்சிமருந்து மற்றும் களைக்கொல்லி ஆகியவற்றை தெளிப்பதை ஒரு சில நாட்கள் கழித்து மேற்கொள்ளுமாறு விவசாயிகளை கேட்டுக்கொள்ளப்படுகிறது.



# மஞ்சள் கரிப்பூட்டை நோய்



காஞ்சிபுரம், அக்.14

இந்நோய் நெல் பயிர் பூக்கும் தருணத்தில் பரவக்கூடியது. நெற்கதிரில் மஞ்சள் நிற பூஞ்சைக் காளான் சில நெல் மணிகளைத் தாக்கக்கூடியது. இதனால் கதிரில் மற்ற சில நெல் மணிகலும் பால் பிடிக்காமல் பதராக மாறும். நாள்பட்ட பூஞ்சைத் தாக்குதலுக்குட்பட்ட, நெற்கதிர் ஆரஞ்சு நிறமாகவும், பிறகு கருமை கலந்த பச்சை நிறமாகவும் காணப்படும். பொதுவாக பூக்கும் மற்றும் நெற்கதிர் முதிர்ந்த நிலையில் இந்நோய் நெற் பயிரைத் தாக்குகிறது. இந்நோய் தாக்குதலுக்குட்பட்டு வயல் களில் நோயின் தன்மைக்கேற்ப 20% முதல் 25% வரை மகசூல் இழப்பீடு ஏற்படுகிறது.

### சாதகமான சூழ்நிலை

காற்றின் ஈரப்பதம் 90% மற்றும் வெப்பநிலை 25-30லி உ.ஆக தட்பவெப்ப நிலை இருக்கும் போது நோய் நன்கு பரவவும். தழைச்சத்து அதிகம் இருப்பின் காற்றின் மூலமாக நெற்ப்பயிரிடையே மிக சுலபமாக பரவும்.

### மேலாண்மை யுக்திகள்

● சரியான இடைவெளியில் பயிர்களின் எண்ணிக்கையை பராமரித்து நட வேண்டும்.

● ஒரு கிலோ விதைக்கு 2ஆ கார்பென்டசிம் உடன் விதை நேர்த்தி செய்வதன் மூலம் நோய் பரவுவதை தடுக்கலாம்.

● பரிந்துரைக்கப்பட்ட தழைச்சத்தினை, அடி மற்றும் மேலுரமாக பிரித்து நெல் பயிருக்கு இட வேண்டும்.

● தழைச்சத்து அதிகம் உபயோகிக்கும்போது எளிதில் இந்நோய் பரவக்கூடியது.

● நோய்த் தாக்குதலுக்குள்ளான தாவரம் மற்றும் தாவரக் கழிவுகளை உடனுக்குடன் அப்புறப்படுத்துதல் மற்றும் எரிப்பதன் மூலம் நோய்ப் பரவுவதை தடுக்க முடியும்.

### வேதியியல் முறை

1. நெற்பயிரில் பால்பிடிக்கும் தருவாயில், கார்ப்பர் ஆக்ஸி குளோரைடு 50%wp, 2.5கி.கி/லிட்டர் தெளிப்பதன் மூலம் நோயை கட்டுப்படுத்தலாம்.

2. நெற்பயிர் தண்டு உருவாகும் தருவாயில் பிராப்பிகோனசோல் 25% EC (Propiconozole - Tilt) 1 லிட்டர் தண்ணீரில் 1.5 மி.லி என்ற அளவில் 15 நாட்கள் இடைவெளியில் இருமுறை தெளித்து நோய் பரவுவதை கட்டுப்படுத்தலாம்.

இதனை, விதைப்பரிசோதனை அலுவலர், விதைப் பரிசோதனை நிலையம், காஞ்சிபுரம் தெரிவித்தனர்.




# டாக்டர் ஏ.பி.ஜே.அப்துல் கலாம் பிறந்தநாளை முன்னிட்டு இலவசமாக மரக்கன்றுகள் வழங்க சிறுகமணி கேவிகே ஏற்பாடு

திருச்சி, அக்.14

திருச்சி மாவட்டம், சிறுகமணி வேளாண்மை அறிவியல் நிலையம் மூலம் விவசாயிகளுக்கு பல்வேறு வேளாண் சார்ந்த பயிற்சிகள், செயல்முறை விளக்கங்கள் மற்றும் விழிப்புணர்வு நிகழ்வுகள் வழங்கப்பட்டு வருகிறது. இதன் ஒரு பகுதியாக, இன்று 15.10.24 (செவ்வாய்கிழமை) பாரத ரத்னா டாக்டர் ஏ.பி.ஜே. அப்துல்கலாம் பிறந்தநாளை ஒட்டி மரக்கன்றுகள் இலவசமாக வழங்கப்படுகின்றன. வீட்டிலேயே மரம் வளர்க்க விரும்புவோர் ஆதார் நகல் மட்டும் கொண்டு வரவும். தோட்டம் போன்றவற்றில் மரம் வளர்க்க சிட்டா கொண்டு வரவும்.

மேலும் விபரங்களுக்கு 0431 2962854, 91717 17832 என்ற எண்ணை அலுவலக நேரத்தில் (காலை 9 மணிமுதல் மாலை 5 மணி வரை) தொடர்பு கொள்ளவும். மேற்கண்ட தகவல்களை சிறுகமணி வேளாண் அறிவியல் நிலைய திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் சி.ராஜாபாபு தெரிவித்தார்.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**


இப்பொழுது தென்னிந்தியாவின்
பிரபலமான வாழை இரகங்களின்
கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு
தொழில்நுட்பத்தில் உங்களுக்காக
உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits.
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை
இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது.
அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# நல்ல விளைச்சல் தரும் ஜி9 வாழை!

**ஜி9 வாழைப்பழத்தின் சிறப்பியல்புகள்**

1. இது அதிக ஏற்றுமதி மதிப்பு மற்றும் பொருளாதார ரீதியாக அதிக லாபம் தரக்கூடிய ஒரு திடமான பச்சை பழமாகும்.

2. செடி 6.5 முதல் 7.5 அடி உயரம் வரை வளரும். திசு வளர்ப்பு செடிகளை நட்ட 11 முதல் 12 மாதங்களுக்குள் கொலைகளை அறுவடை செய்யலாம்.

3. ஜி 9 வாழைப்பழத்தின் மேற்பரப்பு வட்டமானது பழத்தை மற்ற வகைகளில் இருந்து வேறுபட்டதாக ஆக்குகிறது.

4. பச்சை நிறம் முதிர்ச்சியடையாத நிலையிலும், முதிர்ச்சியில் மஞ்சள் நிறத்திலும்இருக்கும். வாழைப்பழத்தின் நீளம் 9 முதல் 10 அங்குலம்.

5. கிராண்ட் ஜி9 வாழை வகையின் பலன்கள் சாப்பிட சுவையாக இருக்கும், மேலும் பலன்களின் தரம் நமது நாட்டு ரகங்களை விட அதிகமாக உள்ளது.

6. கிராண்ட் நயன் வாழை படங்கள் அல்லது ஜி9 வாழைப் பழங்கள் இரண்டும் புதிய பழங்களாக எடுக்கப்பட்டு உணவு பதப்படுத்தும் தொழில்களில் பயன்படுத்தப்படுகின்றன.

7. இது நோயற்ற பழங்களின் பெரிய அளவிலான உற்பத்தியை வழங்குகிறது. இருப்பினும், அவை மற்றும் நாட்டுப் பயிர்களை விடகுறைவான அறுவடை காலத்தைக் கொண்டுள்ளன.

8. பழங்களில் நார்ச்சத்து நிறைந்துள்ளது. ஒருவாழைப்பழம் தினசரி தேவையில் 10% வரை வழங்க முடியும். கூடுதலாக, இதில் ஏராளமான வைட்டமின் ய6 உள்ளது. இது வகை 2 நீரிழிவு நோய்க்கு எதிராக உதவுகிறது மற்றும் எடை இழப்புக்கு உதவுகிறது.

**ஜி9 வாழைப்பழத்தின் மகசூல் விவரங்கள்**

1. அதிக மகசூல் தரும் வாழை (ஒரு செடிக்கு சராசரியாக 45 கிலோ)

2. ஒற்றை வாழை விரலின் avg எடை 190-300 கிராம்

3. ஜி9 திசு வளர்ப்பு செடிகளை பிரதானமான வயலில் நட்டு 11 மாதங்களுக்குள் வாழைப்பூளிகளை அறுவடை செய்யலாம்

4. ஒவ்வொரு கிராண்ட் ஒன்பது வாலிகொத்தும் 210 முதல் 240 படங்களுடன் 10 முதல் 14 கைகள் வரை இருக்கும்

### ஜி9 வாழை நடவு பருவம்

திசு வளர்ப்பு தாவரங்கள் பருவத்தினை சார்ந்தது அல்ல. எனவே, அவற்றை ஆண்டு முழுவதும் மண்ணில் நடலாம். சாதாரண தாவரங்களுக்கும் கிசு படுப்பு தாவரங்களுக்கும் உள்ள முக்கிய வேறுபாடு என்னவென்றால், திசு வளர்ப்பு தாவரங்கள் சாதாரண தாவரங்களில் இருக்கும் வேர்களின் எண்ணிக்கையை விட இரண்டு மடங்கு அதிகமாக இருக்கும். இந்த தனித்துவமான பண்பு தாவர வலிமை மற்றும் நல்ல ஊட்டச்சத்து உறிஞ்சும் திறனை அளிக்கிறது. இதனால் சராசரியாக 30-55 கிலோ/ கொத்து நல்ல மகசூலை அளிக்கிறது.

### ஜி9 வாழை சாகுபடிக்கான மண் தேவைகள்

நல்ல வடிகால் வசதி உள்ள நிலத்தில் வாழைக்கன்றுகளை நடலாம். வாழை செடிகள் குறைந்த மணல் கொண்ட சிவப்பு மற்றும் இதமான மண்ணில் நன்றாக வளரும். மண்ணின் PH நடுநிலை அல்லதுஆறு முதல் ஏழு புள்ளி ஐந்து வரை இருக்க வேண்டும். மோசமாக வடிகால் வசதி இல்லாத, காற்றோட்டம் இல்லாத மற்றும் ஊட்டச்சத்து குறைபாடுள்ள மண்வாகுகளுக்கு ஏற்றுதல்ல.



சுண்ணாம்பு, உவர் நிலங்களில் வாலி சாகுபடி சாத்தியமில்லை. தாழ்வான பகுதிகள், மிகவும் மணல் மண் மற்றும் மோசமான வடிக்கள் கொண்ட கனமான கருப்பு பருத்தி ஆகியவற்றை தவிர்க்க வேண்டும். எனவே, மண்ணின் அமிலத்தன்மையை உறுதி செய்வதற்காக பொருத்தமான ஆய்வகம் அல்லது அரசு சார்ந்த தோட்டக்கலை ஆய்வகத்தில்மண் பரிசோதனை செய்ய பரிந்துரைக் கப்படுகிறது. மண்ணில் அதிக அமிலத்தன்மை இருந்தால், அதை ஜிப்சம் பயன்படுத்தி நடுநிலையாக்க வேண்டும் மற்றும் மண் மிகவும் அடிப்படையாக இருந்தால், அதை டோலமைட் மூலம் நடுநிலையாக்க வேண்டும்.

**ஜி9 வாழை சாகுபடிக்கான விவசாய காலநிலை தேவைகள்**

வெப்ப மண்டல பயிராக, வாழைப்பழங்கள் 15°C முதல் 35°C வரையிலான வெப்பநிலையிலும், ஈரப்பதம் 75% முதல் 85% வரை யிலும் நன்றாக வளரும். ஈரமான வெப்ப மண்டல தாழ்நிலங்களில் கடல் மட்டத்திலிருந்து சராசரி கடல் மட்டத்திலிருந்து 2000 மீட்டர் உயரம் வரை தாவரங்கள் வளர்க்கப்படுகின்றன. பொருத்தமான வகைகளைத் தேர்ந்தெடுப்பதன் மூலம், இந்த பயிர் ஈரப்பதமான வெப்ப மண்டலத்தில் இருந்து உலர்ந்த மிதமான மித வெப்ப மண்டலம் வரையிலான காலநிலைகளில் வழங்கப்படுகிறது. வெப்பநிலை 12°C க்கு கீழே குறையும் போது, குளிர்ச்சியான காயம் ஏற்படுகிறது. மேலும், மணிக்கு 80 கிலோ மீட்டர் வேகத்தில் வீசும் பலத்த காற்றினால் பயிர்கள் சேதமடையும். நான்கு பருவ மழை மாதங்களில் (ஜூன் முதல் செப்டம்பர் வரை) வாழை தாவரங்கள் மிகவும் தீவிரமாக வளரும், சராசரியாக 650 முதல் 250 மிமீ மழை பெய்யும்.

**ஜி 9 வாழை சாகுபடிக்கு நிலம் தயாரித்தல்**

பசுந்தால் உரப்பயிர்களான டைஞ்சா, கௌபீ போன்றவற்றை நடவு செய்வதற்கு முன் உங்கள் வாழைகளை நட்டு, அவற்றை மண்ணில் புதைக்கவும். நிலத்தில் 2-4 உரை உழுது சமன் செய்து தயார் செய்யலாம். கட்டிகளை உடைக்க உழுவதன் மூலம் மண்ணில் சிறிது சாய்ந்து கொள்ளுங்கள். மண் தயாரிக்கும் போது பண்ணை முற்றத்தில் எருவின் அடிப்படை அலகு சேக்கப்பட்டு மண்ணில் நன்கு கலக்கப்படுகிறது. குழி 45 செமீ அளவு இருக்க வேண்டும். மேல் மண்ணில் 10 கிலோ பண்ணை உரம், 250 கிராம் வேப்பம்பின்னாக்கு மற்றும் 20 கிராம் கார்போபியூரான் நிரப்பப் படும். தயாரிக்கப்பட்ட குழிகளை சூரிய கதிர்வீச்சுக்கு வெளிப் படுத்துவதன் மூலம், தீங்கு விளைவிக்கும் பூச்சிகள் கொல்லப் படுகின்றன. மண்ணால் பரவும் நோய்கள் தடுக்கப்படுகின்றன. மேலும் காற்றோட்டம் எளிதாக்கப்படுகிறது.



எட்டுக்கு மேல் PH உள்ள உப்புகார மண்ணில், கரிமப்பொருட்கள் குழி கலவையில் இணைக்கப்பட வேண்டும். பெர்லைட்போரா ரோசிட்டி மற்றும் காற்றோட்டத்தை மேம்படுகிறது. போரோசிட்டியை மேம்படுத்துகிறது மற்றும் உப்புத் தன்மையை குறைக்கிறது. குழிகளில் நடுவதற்கு மாற்றாக சால்களில் நடவு செய்யலாம். ஒரு செடியின் இடைவெளி மற்றும் ஆழத்தை மண் அடுக்கு மற்றும் நடவு முறை ஆகியவற்றின் அடிப்படையில் தீர்மானிக்க முடியும்.

## ஜி9 வாழை நடவு பொருள் தேர்வு

பரப்பும் பொருளாக, தோராயமாக 1.5 முதல் இரண்டு கிலோ எடையுள்ள வாள்உறிஞ்சிகள் பொதுவாகப் பயன்படுத்தப்படு கின்றன. பொதுவாக, உறிஞ்சு பவர்கள் 100 பொருட்கள் மற்றும் நோய் கிருமிகளால் பாதிக்கப்படலாம். கூடுதலாக, குறிஞ்சியின் வயது மற்றும்அளவு மாறுபாட்டின் காரணமாக பயிர் ஒரே மாதிரியாக இல்லை, மேலும் அறுவடைக்கு அதிக நேரம் எடுக்கும், மேலாண்மை மிகவும் கடினமாகிறது. நடவு செய்வதற்கு, இன்-விட் ரோகுளோனல் இனப்பெருக்கம், அதாவது திசு வளர்ப்பு தாவரங்கள் பரிந்துரைக்கப்படுகிறது. இது ஆரோக்கியமான, நோயற்ற, சீரான மற்றும் உண்மையான தயாரிப்பாகும். கடினமான இரண்டாம் நிலை நாற்றுகளை மட்டுமே நடவு செய்ய பரிந்துரைக்கப்படுகிறது.

## உறிஞ்சிகளுக்கு முன் சிகிச்சை

புழுவின் வேர்கள் மற்றும் சிதைந்த பகுதியை கத்தரிக்கவும், போலி தண்டுகளை வெட்டி உறிஞ்சிகளை தரம் பிரிக்கவும். கார்போஃப்யூரான் 3 ஜி துகள்கள் ஒரு உறிஞ்சிக்க 40 கிராம் பிரலைனை உருவாக்குகின்றன. நூர்புழுக்களைக் கட்டுப்படுத்த, நான்கு களிமண் பாகங்கள் மற்றும் ஐந்து தண்ணீர்கொண்டஒரு குழம்பு கரைசலில் சோற்றை நனைக்கவும். நீங்கள் புழுக்களை 0.75% மோனோகுரோட்டோபாஸில் நனைத்து, குறைந்தது 24 மணி நேரம் உலர விடவும், பின்னர்அவற்றை நடவும். சன்ஹெலம்ப் 45 ஆவது நாளில் விதைக்கப்பட்டு சுமார் ஒரு மாதத்திற்கு பிறகு இந்தசெயல்பாடு நூல் புழு உருவாகுவதைக் குறைக்கிறது. ஐந்து முதல் ஆறு இலைகள் கொண்ட திசு வளர்ப்பு வாழை செடிகளைப் பயன்படுத்தலாம். நடவு செய்யும் போது ஒரு செடிக்கு 25 கிராம் சூடோமோனாஸ்ஸஃப்ளோரசன்ஸை இடவும்.

நாளை தொடரும்...